ந.க.எண்.அ1/109/6114/2022.
ஆணைஎண்:268/2025.

காவல்துறை துணைத்தலைவர்
அலுவலகம்,
தொழில் நுட்பசேவைகள்,
சென்னை-04.
நாள்:26.05.2025.

## பணிவரன்முறைப்படுத்துதல் ஆணை

பொருள்: காவல் - காவல் தொலைத்தொடர்பு பிரிவு - அமைச்சுப்பணி – கருணைஅடிப்படையில் பணிநியமனம் பெற்று பணி புரிந்து வரும் திரு.V.ராஜா, இளநிலை உதவியாளர், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் (முன்னர் காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை) - தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுவது–தொடர்பாக.

பார்வை:
1. தலைமை அலுவலக பணிநியமன ஆணை ந.க.எண்: 3756001/NGBII(2)/2022-8, நாள்:02.05.2023.
2. அரசுக்கடித எண்:7819/காவல்-15/2022-2, நாள்:21.11.2022.
3. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.2528450/ சி.ஏ.ஆர்-1/2022, நாள் : 03.12.2022.

*****

திரு.V.ராஜா, த/பெ.(லேட்)வெங்கடேசன் தலைமைக் காவலர் 234, (காஞ்சிபுரம் மாவட்டம்) என்பவர் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.1433/சி.ஏ.1/2005-3, நாள்: 25.05.2006 மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆணை எண்: 805/2006, ந.க.எண்: எம்1/21752/2006, நாள்: 12.06.2006 –ன்படி காஞ்சிபுரம் மாவட்ட காவல் அலுவலகத்தில் கணினி விவரப்பதிவாளராக 22.06.2006 அன்று பணிக்கு அறிக்கை செய்துள்ளார். மேலும், இவரது தற்காலிக கணினி விவரப்பதிவாளர் பணி அரசாணைநிலை எண். 220, உள் (காவல் 15) துறை நாள்: 18.02.2016 மற்றும் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்: 175817/A&R 1/2007, நாள்: 14.03.2016 மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆணை எண்.336/2016, ந.க.எண்: M1/11589/2016, நாள்: 05.04.2016 - ன் படி 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலும், தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண். 3756001/NGBII(2)/2022-8, நாள்: 02.05.2023 –ன்படி, மேற்படி கணினி விவரப்பதிவாளர் 2022-2023-ம் ஆண்டிற்கான கணினி விவரப்பதிவாளரிலிருந்து இளநிலை உதவியாளர் பணிமாறுதலுக்கான பட்டியலில் வரிசைஎண். 29-ல் சேர்க்கப்பட்டு காவல் தொலை தொடர்பு பிரிவு, சென்னை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 07.06.2023 மு.ப. அன்று பணிக்கு அறிக்கை செய்துள்ளார்.

3) மேலும், பார்வை 2-ல் காணும் அரசுக் கடிதத்தின்படி தனியர் திரு.V.ராஜா என்பவர் கருணைஅடிப்படையில் பணிநியமனம் கோரி மூன்று ஆண்டுகளுக்குள் மனு சமர்ப்பித்துள்ளார், மனு சமர்ப்பித்த நாளில் தனியர் 18 வயது நிறைவடைந்தவராகவும் மற்றும் 35 வயதுக்குட்பட்டவராகவும் இருந்துள்ளதால், தமிழ்நாடுஅரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 15 மற்றும் பிரிவு 20(6) (b)- ஆகியவை மனுதாரரின் கணினி விவரப்பதிவாளர் பணிநியமனத்தின் போது பின்பற்றப்பட்டுள்ளது. மேலும், தனியர் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கு அனைத்து

தகுதிகளையும் பெற்றிருந்ததாலும், கணினி விவரப்பதிவாளர் பணியில், பணிவரன்முறை மேற்கொள்ள விதிதளர்வு ஏதும் தேவைப்படாத காரணத்தினாலும், தனியரின் பணி 01.05.2007 முற்பகல் முதல் கணினி விவரப்பதிவாளர் பதவியில் ஏற்கனவே பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர், அதன் பின்னர் பார்வை 3-ல் காணும் தலைமை அலுவலக ஆணையின்படி 2022-2023 ஆண்டிற்கான கணினி விவரப்பதிவாளரிலிருந்து இளநிலை உதவியாளர் பணிமாறுதலுக்கான பட்டியலில் வரிசைஎண்.29-ல் சேர்க்கப்பட்டு 07.06.2023 மு.ப. பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தார்.

4) மேலும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் கீழ் பணிமாறுதல் மூலம் தட்டச்சர் / இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட தனியர்களுக்கு, விதி தளர்வு தேவைப்படாத நேர்வுகளில் பணிவரன் முறையை உரிய பணி நியமனம் செய்யும் அலுவலர் நிலையிலேயே மேற்கொள்ளலாம் என்று அரசு கடித எண்.7819/ காவல்.15/2022-2, நாள்:21.11.2022-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு உரியநடவடிக்கை மேற்கொள்ள பார்வை 2-ல் காணும் தலைமை அலுவலக குறிப்பாணை மூலமாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5. எனவே, அரசு கடித எண்.7819/ காவல்.15/2022-2, நாள்:21.11.2022-ன் படி திரு.V.ராஜா, த/பெ.(லேட்)வெங்கடேசன் தலைமைக் காவலர் 234, (காஞ்சிபுரம் மாவட்டம்) என்பவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியினை அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 07.06.2023 மு.ப முதல் பணிவரன்முறைபடுத்தி ஆணையிடப்படுகிறது.

ஒம்/-அவிநாஷ் குமார்
காவல்துறை தலைவர்,
(பொறு) காவல்துறை துணைத்தலைவர்,
தொழில்நுட்ப சேவைகள்,
காவல் தொலைத்தொடர்பு பிரிவு,
சன்னை — 04.

பெறுநர்:
திரு.V.ராஜா, இளநிலை உதவியாளர், மாவட் காவல் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம்.
(காவல் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் மூலமாக)

நகல்:
காவல்துறை தலைமை இயக்குனர், தமிழ்நாடு, சென்னை-4.
காவல்துறை தலைவர், தொழில்நுட்ப சேவைகள், சென்னை-4.
காவல் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம் மாவட்டம்.
நிர்வாக அலுவலர் (நிர்வாகம் & கணக்கு), காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை-4.
அனைத்து கண்காணிப்பாளர்கள், காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை-4.
ஆணைப் புத்தம்.

-/உ.ந.உ.ப/-

நிர்வாகஅதிகாரி (நிர்வாகம்),
காவல் தொலைதொடர்பு பிரிவு,
சென்னை-4.